பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
27 10 2024 **SUNDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்க அனைவரும் உறுதியேற்போம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
- தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசியல் கட்சிகள் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.
- வேளாண் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்வதாக மாநில அரசு கூறியுள்ளது.
- இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 12 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.
- பிரான்ஸ் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akansha Salunkhe** பட்டம் வென்றார்.

>>>>><<<<<

சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்க அனைவரும் உறுதியேற்போம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 72 செகண்ட்ஸ்)

இணையதள மோசடிக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் மாணவர்கள் அதிக அளவில் ஈடுபட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 53 செகண்ட்ஸ்)

சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் பகவான் பிர்ஸா முண்டாவின் 150வது பிறந்த தின கொண்டாட்டங்களை தேசிய அளவில் கொண்டாட முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (3) 81 செகண்ட்ஸ்)

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தினத்தை முன்னிட்டு, ஆண்டுதோறும் நடைபெறும் ஒற்றுமை ஓட்டம், இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை காரணமாக, வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (4) 42. செகண்ட்ஸ்)

தீபாவளி உள்ளிட்ட பல்வேறு பண்டிகைகள் கொண்டாடப்படுவதை ஒட்டி, நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்ட பிரதமர் உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்பதை இந்த கொண்டாட்டத்தின் போது நினைவில் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (5) 38 செகண்ட்ஸ்)

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**>>>>><<<<<**

தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசியல் கட்சிகள் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவிப்பது தேர்தல் நடத்தை நெறிமுறைகளுக்கு எதிரானது என்று ஜார்க்கண்ட் மாநில கூடுதல் தலைமைத்தேர்தல் அதிகாரி திருமதி. **Neha Arora** எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதனை மீறுவோர் மீது வழக்குகள் பதிவு செய்யப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஜார்க்கண்ட் மாநில அமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. **Irfhan Ansari,** பிஜேபியின் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்திருந்த நிலையில் தேர்தல் ஆணையம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

>>>>><<<<<

தெலங்கானாவில் ஹைதராபாத் மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஹைதராபாதில் முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

மத்திய அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் இந்த இரண்டாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அம்மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. ஸ்ரீநிவாஸ் ரெட்டி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாநிலத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு அடுத்த மாதம் 4ஆம் தேதி தொடங்கி, 30ஆம் தேதி முடிவடையும் என்றும் திரு. ஸ்ரீநிவாஸ் ரெட்டி கூறினார்.

>>>>><<<<<

வேளாண் துறையில் தமிழகம், முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று மாநில அரசு கூறியுள்ளது.

ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 611 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விவசாயிகளுக்கு 5 ஆயிரத்து 148 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 12 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த இந்த மீனவர்களை சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

பிரான்ஸ் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akansha Salunkhe** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 11-7, 11-7, 11-6 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Yasshmita Jadish Kumar**–ஐ வென்றார்.

**>>>>><<<<<**

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் **Arjun Erigaisi,** 2 ஆயிரத்து 800 புள்ளிகளை கடந்து, சாதனை படைத்ததைக் கண்டு நாடே பெருமிதம் கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Yashaswini Gorpade - Krittwika** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, ஜெர்மனியின் **Klee - Schreiner** இணையை வென்றது.

**>>>>><<<<<**

**Dutch** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-19, 21-16 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Tan Jia Jie-**யை வென்றார்.